1995 ஏப்ரல் 18]

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்--விடைகள், வினா எண்.321, திரு ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

321—

திருப்பத்தூர் கிளைச் சிறைச்சாலையை விரிவுபடுத்துதல்

23304—திரு ஏ.கே.சி. சுந்தரவேல்:

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பத்தூர் நகரில் உள்ள கிளைச் சிறைச்சாலையை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஏதுமில்லை.

முற்பகல் 10.05

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகரில் உள்ள கிளைச் சிறைச்சாலை கட்டப்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேலாகிறது. 50 பேர்களுக்கு மேல் சிறைக் கைதிகளை அங்கு வைக்க முடியவில்லை. சிறைக் கைதிகளை அடிக்கடி வேலூருக்கு அழைத்துச் செல்வது மிகச் சிரமமான காரியமாக இருப்பதால், திருப்பத்தூர் நகரில் உள்ள கிளைச் சிறைச்சாலை விரிவுபடுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருப்பத்தூரிலே இருக்கின்ற கிளைச் சிறைச்சாலையை விரிவுபடுத்தும் திட்டம் அரசினிடத்திலே ஏதுமில்லை. ஆனால் சீரமைக்கும் திட்டம் - சில வசதிக் குறைவுகள் அங்கே இருக்கின்றன. குறிப்பாக மூன்று வசதிக் குறைவுகள்: (1) பெண் சிறைவாசிகளுக்குத் தனியாகக் கழிவறை கட்டிடம் கட்டுதல்; (2) கிரில் கேட் அமைத்தல், (3) சுற்றுச் சுவரை உயர்த்திக் கட்டுதல், ஆகிய இந்த மூன்று பணிகளுக்காக 1 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாயிலே ஒரு திட்டம் வகுக்கப்பட்டு விரைவிலே இந்தப் பணிகள் நிறைவேற்றப்படும்.

திரு.ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திடீர் அரசியல் தலைவர்கள் திடீர் எனப் போராட்டம் என்று

அறிவித்து போராட்டம் நடத்தும் பொழுது திருப்பத்தூர் நகரில் உள்ள கிளைச் சிறைச்சாலை போதுமானதாக இல்லை. அந்தக் காலகட்டங்களில் அரசுப் பள்ளிக்கூடங்களில், கல்லூரிகளில், கல்யாண மண்டபங்களில் வைக்கிறார்கள். அதனால் அவர்கள் எந்த நேரத்திலும் தப்பிச் செல்ல வாய்ப்பு உள்ளது. காவல் துறைக்குப் பல சிரமங்கள் ஏற்படுவதால், திருப்பத்தூர் நகரில் உள்ள கிளைச் சிறைச்சாலையை விரிவுபடுத்த முடியவில்லை என்றாலும், சீரமைக்கப்படும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அது எப்பொழுது அமைக்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. விரைவாக அப்பணிகள் தொடங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 322, திரு. எச். எம். ராஜு, இருக்கையில் இல்லை.

வினா எண் 323, திரு. ஆ. பாலையா, இருக்கையில் இல்லை.

வினா எண் 324 திரு ஆர். தங்கராஜ், இருக்கையில் இல்லை.

வினா எண் 325, திரு. சி. சுவாமிநாதன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

325 —

சமூகக் காடுகள் வளர்ப்பு திட்டத்தில் தைலமரங்கள் வளர்த்தல்

*53809—திரு. **சி. சுவாமிநாதன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் எத்தனை ஏக்கர் நிலங்களில் தைலமரம் வளர்க்கப்படுகின்றது.?

(ஆ) அவை அன்றாட சந்தை விலையில் விற்கப்படுகின்றனவா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,